அசல் வழக்கு எண். 162/2020 தேதி 12.04.2024

வா.சா.1 – செந்தில்குமார்.

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் தற்போது பொய்யாமணி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்து என் தந்தை பெயரில் அரசால் வழங்கப்பட்டதாகும். என் தந்தை தற்போது உயிருடன் இல்லை. என்னுடன் பிறந்த ஒரு சகோதரரி உள்ளார். அவர் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் என் சகோதரி உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார். அதனால் சேர்க்கவில்லை. தாவா சொத்தை 29.11.1996ம் தேதி 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டேன் என்றால் கிரையம் கொடுக்கவில்லை. தாவா சொத்தை 1ம் பிரதிவாதியிடம் மறுபயன் பெற்று கொண்டு கிரையம் கொடுத்துவிட்டேன் என்றும், மேற்படி கிரையம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எங்களுக்கு தெரியாமல் பத்திரம் செய்துள்ளார். அதன் விவரம் எனக்கு 2002ம் ஆண்டு தெரியவந்தது. 2020 ம் வருடம் இவ்வழக்கை தாக்கல் செய்தேன். தாவா சொத்தை நானும், எனது தாயார் மற்றும் எனது சகோதரரி ஆகியோர் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டோம் என்றும், தற்போது வழக்கிற்காக அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

2. 29.11.1996ம் தேதி தாவா சொத்தை கிரையம் கொடுத்த பின்னர் தாவா சொத்து எனது அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. 2002ம் வருடம் எனக்கு விபத்து ஏற்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக ஊர் பெரியவர்கள் மூலம் பேசியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் தந்தை எனக்கு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையான ஆவணங்களை எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா-ஆ 1 முதல் வா.சா.ஆ-3 வரையான ஆவணங்களில் 1ம் பிரதிவாதி தரப்பினர் இல்லை என்பதால் மேற்படி ஆவணம் அவரை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு 1991ம் வருடம் முதல் தான் வாய்தா செலுத்தியுள்ளேன் என்றால் 1996ம் வருடம் வாய்தா செலுத்தியுள்ளேன்.

3. 1996 ம் ஆண்டிற்கு பின்னர் தாவா சொத்திற்கு நான் வாய்தா செலுத்தவில்லை. தாவா சொத்தை 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தால் அதன் பின்னர் வாய்தா செலுத்தவில்லை என்றால் சரியல்ல. அரசால் சொத்துக்களுக்கு வாய்தா வசூல் செய்யாத காரணத்தால் செலுத்தவில்லை. எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் தாவா சொத்தின் உரிமை குறித்து பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்காத காரணத்தால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றும், தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் என்னறால் தாயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-P.பாலமுருகன்

**Additional District Munsif,**
**Kulithalai.**